பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 10 2026 WEDNESDAY 12.40 PM

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. மக்களின் அன்பு மற்றும் நம்பிக்கையின் காரணமாக 25 ஆண்டுகளுக்கும் மேலாக பொதுச்சேவையில் தலைமை பொறுப்பை தாம் வகித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வங்கிகளுக்கான ரெப்போ வட்டி விகிதத்தை ஐந்தரை சதவீதமாக ரிசர்வ் வங்கி உயர்த்தியுள்ளது.

3. இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

4. உலக பருத்தி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

மக்களின் அன்பு மற்றும் நம்பிக்கையின் காரணமாக 25 ஆண்டுகளுக்கு மேலாக பொதுச்சேவையில் தலைமை பொறுப்பை தாம் வகித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

25 ஆண்டுகள் பொதுச்சேவையின் நிறைவையொட்டி, புதுதில்லியில் நடைபெற்ற வளர்ச்சியடைந்த இந்தியா - மாபெரும் பொதுக்கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், விநாயகர் கோவிலுக்கு சென்று 140 கோடி மக்களுக்காக வழிபாடு செய்ததாக கூறினார்.

மக்களுக்காக இரவும், பகலும் தொடர்ந்து சேவையாற்ற தமக்கு வலிமை அளிக்க பிரார்த்தனை செய்ததாக அவர் தெரிவித்தார்.

கடந்த 25 ஆண்டுகளில் மக்களின் நம்பிக்கையை பெற்றது மிகப்பெரிய சொத்து என்று திரு நரேந்திர மோடி கூறினார்.

மக்களின் நலனுக்காக கொள்கை அளவில் பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கைபேசிகள் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், தற்போது உலக அளவில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கைபேசிகள் பிரபலமாகியுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் நிலையான வேளாண் வளர்ச்சியில் புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிஜேபி தலைவர் திரு நிதின் நபின், பிரதமர் திரு நரேந்திர மோடி அரசியலை நாட்டு சேவைக்காக பயன்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

ஏழைகள், இளையோர், விவசாயிகள், மகளிருக்காக பிரதமர் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

கடந்த 25 ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி, 140 கோடி இந்தியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை கொண்டுவந்துள்ளதாக திரு நிதின் நபின் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர், மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில், பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைநோக்கு பார்வையுடன் நாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பாராட்டியுள்ளார்.

25 கோடி மக்கள் வறுமைக்கோட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது அவரது மிகப்பெரிய சாதனை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா வெளியிட்டுள்ள செய்தியில், பிரதமர் திரு நரேந்திர மோடி அரசியல் சாசனத்தை எப்போதும் பின்பற்றிய தலைவர் என்று பாராட்டியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், கடந்த 2001-ஆம் ஆண்டு இதேநாளில் திரு நரேந்திர மோடி குஜராத் முதலமைச்சராக பதவியேற்றதை நினைவுகூர்ந்துள்ளார்.

ஏழை மக்களின் நலனுக்காகவும், இளையோர், மகளிர் மேம்பாட்டுக்காகவும், பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியவர் திரு நரேந்திர மோடி என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள பதிவில், குஜராத் முதலமைச்சராக 13 ஆண்டுகள் பணியாற்றியுள்ள திரு நரேந்திர மோடி, பிரதமராக 12 ஆண்டுகளை கடந்து பணியாற்றி வருவதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

இதனிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடியின் 25 ஆண்டுகள் பொதுச்சேவை நிறைவையொட்டி, தமிழகத்தின் உதகையில் நடைபெற்ற சேவை ஜோதி யாத்திரையில் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பங்கேற்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்தார்.

*(Sound Byte — எல். முருகன் - 45 Sec. )*

<<<<<<>>>>>>

"மக்கள் நலனே தேசத்தின் நலன்" என்பதை, தாரக மந்திரமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக, கடல்சார் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இது தொடர்பான சிறப்புத் தொகுப்பில் இன்று கோவாவில் செயல்படுத்தப்படும் **Sagarmala** திட்டம் இடம் பெறுகிறது.

*(வாய்ஸ் ஓவர் - Voice Over - 90 Sec.)*

*நாட்டின் வர்த்தக வளர்ச்சியில் கடல்சார் துறையின் பங்கு மிகவும் முக்கியமானது.*

*இந்தியாவில் **11** ஆயிரம் கிலோமீட்டர் நீளமான கடலோரப் பகுதிகளும், **14** ஆயிரத்து **500** கிலோமீட்டர் நீர்வழிப் பாதையும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப்பங்கு வகிக்கிறது.*

*சர்வதேச கடல்சார் வர்த்தகத்தை பாதுகாக்கும் வகையில் பிரதமர் திரு. நரேந்திரமோடி, கடந்த **2015** ஆம் ஆண்டு **Sagarmala** திட்டத்தை தொடங்கி வைத்தார்.*

*துறைமுகங்களை நவீனமயமாக்குவது, வர்த்தக கப்பல் போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்துவது, கடலோர சமூகத்தினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்த திட்டம் வழிவகை செய்கிறது.*

*நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு **Sagarmala** திட்டம் உதவும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.*

*கோவா போன்ற மாநிலத்தின் வளர்ச்சிக்காக **Sagarmala** திட்டம் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*அம்மாநிலத்தின் துறைமுக கட்டமைப்பு, நீர்வழித்தடம், படகு சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும் **Sagarmala** திட்டம் உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*கோவாவில் இதுவரை **840** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **10** சாகர்மாலா திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக கோவா துறைமுக துறைத் தலைவர் **Octavio Rodri Gues** தெரிவித்துள்ளார்.*

*மாநிலத்தின் கடல்சார் கட்டமைப்பை மேம்படுத்துவதுடன் துறைமுகங்களை இணைப்பதிலும் முக்கிய பங்கு வகித்ததாக அவர் கூறியுள்ளார்.*

*980 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு சாகர் மாலா திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட கோவாவில் சாகர்மாலா கடல்சார் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.*

<<<<<<>>>>>>

ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான ரெப்போ வட்டி விகிதத்தை 25 அடிப்படை புள்ளிகள் அதிகரித்து, ஐந்தரை சதவீதமாக உயர்த்தியுள்ளது.

ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ள நிதிக்கொள்கையில், வங்கிகளுக்கான ரெப்போ வட்டி விகிதத்தை ஐந்து புள்ளி இரண்டு ஐந்து சதவீதத்தில் இருந்து, ஐந்தரை சதவீதமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணவீக்க விகிதம் அதிகரித்து வருவதையடுத்தும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை உயர்ந்து வருவதன் காரணமாகவும் ரெப்போ வட்டி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

**Ghana** நாட்டின் **Accra**-வில் வெளியுறவு சேவை கல்விக்கழகத்தில் உரையாற்றிய அவர், திறன் பயிற்சி பெற்ற இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவர்கள் என்று தெரிவித்தார்.

இந்தியா - ஆப்பிரிக்க நாடுகள் இடையேயான உறவுகள் மிக பழமையான என்று தெரிவித்த அவர், இந்தியா, கட்டமைப்பு, டிஜிட்டல் தொழில்நுட்பம், உற்பத்தித் துறைகளில் வளர்ச்சியடைந்து வருவதாக கூறினார்.

இந்தியா, ஆப்பிரிக்க நாடுகளுடன் வணிகம், பேரிடர் மேலாண்மை, வேளாண், சுகாதாரம், பசுமை எரிசக்தித் துறையில் ஒருங்கிணைந்து செயல்பட்டுவருவதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உலக பருத்தி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் வெளியிட்டுள்ள காணொலி பதிவில், இத்துறையை சார்ந்த அனைவருக்கும் வாழ்த்து தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

பருத்தி விவசாயிகள், ஜவுளி தொழிலாளர்கள், பின்னலாடை பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் **60** லட்சம் விவசாயிகள் பருத்தி சாகுபடியில் ஈடுபட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

கைத்தறி தொழில்துறையுடன் இணைந்து, ஏராளமான சிறிய ஜவுளி நிறுவனங்கள் செயல்பட்டு வருவதையும் திரு கிரிராஜ் சிங் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா **10** விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று **11** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்சை ஆடிய இந்தியா விக்கெட் இழப்பின்றி இலக்கை எட்டியது.

இந்தியா முதல் இன்னிங்சில் **315** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் **174** ரன்னுக்கும், இரண்டாவது இன்னிங்சில் **151** ரன்னுக்கும் ஆட்டமிழந்தது.

-------------

சீன **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Sha — Manav Thakkar** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **11-5, 11-6, 2-11, 7-11, 12-10** என்ற செட் கணக்கில், சீன இணையை வென்றது.

**---------**

**Arctic** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வி சர்மா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-15, 21-17** என்ற செட் கணக்கில், தைவானின் **Chian Chiu**-வை வென்றார்.

**<<<<<<END>>>>>>**